செய்தி வெளியீடு எண்:646 நாள் :22.12.2014

## செய்தி வெளியீடு

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, குடும்ப அட்டைகளில் உள்தாள்கள் ஒட்டும் பணி முன்னேற்றம் மற்றும் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்த, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலர்களின் மாநில அளவிலான ஆய்வுக் கூட்டம் **22.12.2014** இன்று சென்னை, சேப்பாக்கம் கூட்டரங்கில் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா.காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தற்போது புழக்கத்திலுள்ள குடும்ப அட்டைகளின் செல்லத்தக்க காலத்தை **01.01.2015** முதல் **31.12.2015** வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கும் வகையில், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து நியாய விலை அங்காடிகளிலும் **15.12.2014** முதல் நடைபெற்று வரும் உள்தாள்கள் ஒட்டும் பணியினை மாவட்ட வாரியாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்று வரை **1** கோடியே **42** இலட்சத்து **93** ஆயிரத்து **355** அட்டைகளில் உள்தாள் ஒட்டும் பணி **(72%)** நிறைவடைந்துள்ளது என்று தெரிவித்தார். குடும்ப அட்டைதாரர்களின் வசதிக்கென வழங்கீட்டு கூறு முறையில் (Staggering System) உள்தாள்கள் வழங்கப்பட்டு வருவதால் பொதுமக்கள் அவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நாட்களில் அங்காடிகளுக்கு சென்று உள்தாள்களை பெற்றுக் கொள்ளலாம். தங்களுக்கு குறிப்பிடப்பட்ட நாட்களில் செல்ல இயலாதவர்கள் அந்த

வாரத்தின் சனிக்கிழமையில் அங்காடிகளில் உள்தாள்களை பெற்றுக் கொள்ளலாம்.

**குடும்ப அட்டையில் உள்தாளை இணைத்து பெறுவதற்கு காலக்கெடு ஏதும் நிர்ணயம் செய்யப்படவில்லை என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள்** மீதமுள்ள குடும்ப அட்டைகளில் உள்தாள்கள் ஒட்டும் பணியினை துரிதப்படுத்தி, பொது மக்களுக்கு எவ்வித சிரமமுமின்றி, இதனை விரைந்து முடிக்க வேண்டுமென்று அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

வெள்ளை நிறமுடைய எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகவரி ஆதாரத்திற்காக வழங்கப்படும் மஞ்சள் நிறமுடைய தக்கல் குடும்ப அட்டைதாரர்கள் அவர்களுடைய " N " குடும்ப அட்டைகளை புதுப்பித்துக் கொள்ள www.consumer.tn.gov.in என்ற இணைய தளத்தில் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவ்வசதி **31.3.2015** வரை செயல்பாட்டில் இருக்கும். இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இணைய தளத்தில் குடும்ப அட்டையை புதுப்பித்துக் கொள்ள இயலாத வெள்ளை மற்றும் மஞ்சள் நிறமுடைய எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டைதாரர்கள் பொது விநியோகத் திட்ட குறைதீர் முகாம்களில் அவர்களுடைய குடும்ப அட்டையை புதுப்பித்துக் கொள்ளலாம் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

குடும்ப அட்டை கோரி மனு செய்தவர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தகவல்கள் கிடைக்கப் பெறவில்லையெனில்

உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர் அலுவலக இ–மெயில் முகவரிக்கு கோரிக்கை அனுப்பலாம். அலுவலர்களின் செல்லிடை பேசி மற்றும் இ–மெயில் முகவரிகள் இத்துறையின் இணைய தளத்தில் (www.consumer.tn.gov.in) அளிக்கப்பட்டுள்ளது.

பொது விநியோகத் திட்டம் மற்றும் குடும்ப அட்டைத்தாரர்களின் குறைபாடுகளைக் களைவதற்கு, **"குறைதீர் முகாம்கள்"** சென்னை உள்ளிட்ட அனைத்து மாவட்டங்களிலும், மாதந்தோறும் 2ம் சனிக்கிழமையன்று காலை 10 மணி முதல் 1 மணி வரை நடத்தப்பட்டு வருகிறது. இம்முகாம்களில் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்கப்படும் குடும்ப அட்டை கோரும் மனுக்கள், அட்டைகளின் நகல் கோருதல், குடும்ப அட்டைகளில் உறுப்பினர்களின் பெயர் சேர்த்தல், நீக்கல், முகவரி மாற்றம், எரிவாயு இணைப்புகள் மற்றும் இவை தொடர்பான திருத்தங்கள் குறித்த மனுக்கள் பிற்பகல் வரை பெறப்பட்டு, உரிய பரிசீலனைக்குப் பிறகு அன்று மாலைக்குள் அவற்றுக்கு தீர்வு காணப்படுகிறது. இக்குறைதீர் முகாம்களில் மாவட்ட, வட்ட வழங்கல் அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்கின்றனர். ஜூன் 2011 முதல் 13.12.2014 வரையில் இம்முகாம்களில் 3 இலட்சத்து 7 ஆயிரத்து 70 மனுதாரர்கள் பயனடைந்துள்ளனர். **இவ்வகை குறைதீர் முகாம்களை நடத்தும் ஒரே மாநிலம் இந்தியாவிலேயே தமிழ்நாடு மட்டும் தான் என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.**

தமிழ்நாட்டில் **01.06.2011** முதல் **30.11.2014** வரை **11** இலட்சத்து **14** ஆயிரத்து **761** புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், **3** இலட்சத்து **38** ஆயிரத்து **984** போலிக் குடும்ப அட்டைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன என்றும் மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

எதிர்வரும் கிருஸ்துமஸ் மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு நியாய விலைக் கடைகளில் பச்சரிசி, சர்க்கரை உள்ளிட்ட அனைத்து பொருள்களும், உரிய தரத்துடன் இருப்பு வைத்து விநியோகம் செய்யப்பட வேண்டுமென்று அலுவலர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படும் தமிழக அரசின் மக்கள் நலத்திட்டங்களின் முழுப்பயன்களும் உரியவர்களை சென்றடைவதை உறுதி செய்யும் பொருட்டு, அத்தியாவசியப் பொருள்களின் கடத்தல் தடுப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இன்று வரை **21** ஆயிரத்து **66** நபர்கள் கைது செய்யப்பட்டு அவற்றில் **616** பேர் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் (BM Act) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்று மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இக்கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத்துறை முதன்மை செயலாளர் திரு.முகம்மது நசீமுத்தின்,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குனர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் திரு.இரா.கிர்லோஷ்குமார்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Principal Secretary
Co-op.,Food and CP.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**